# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 670 /2016/பேரூ

ஆணை எண்: 221/2017

நாள்: 01/09/2017

1) திரு. M.S.ஆண்டவர், முன்னாள் மன்ற உறுப்பினர்,
2) திரு. T. பாலசுப்பிரமணியம்,
முன்னாள் மன்ற உறுப்பினர்,
தேவூர் பேரூராட்சி மற்றும் ஊர் பொதுமக்கள்,
தேவூர், சேலம் மாவட்டம் - முறையீட்டு மனுதாரர்கள்

1) திரு. பழனிசாமி, முன்னாள் துணைத்தலைவர்,
2) திரு. நாச்சியண்ணன்,
முன்னாள் நியமன பணிக்குழுத் தலைவர்,
தேவூர் பேரூராட்சி, சேலம் மாவட்டம் - எதிர் மனுதாரர்கள்

## ஆணை

சேலம் மாவட்டம், தேவூர் பேரூராட்சியைச் சேர்ந்த திரு. M.S. ஆண்டவர், முன்னாள் மன்ற உறுப்பினர் மற்றும் திரு. T. பாலசுப்ரமணியம் ஆகியோரின் 10.03.2015 நாளிட்ட முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் ந.க.எண்.5615/2015/இ2 நாள்:20.06.2015ன் வாயிலாக இம்முறைமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. 11.07.2016 அன்று பெறப்பட்டு 670/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

சேலம் மாவட்டம், தேவூர் பேரூராட்சியைச் சேர்ந்த திரு. M.S. ஆண்டவர், முன்னாள் மன்ற உறுப்பினர் மற்றும் திரு. T. பாலசுப்ரமணியம், முன்னாள் மன்ற உறுப்பினர் ஆகியோர் தமது முறையீட்டு மனுக்களில் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளனர்.

தேவூர் பேரூராட்சி தலைவர் பதவியிடம் தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டதெனவும் அதன் மன்றத்தலைவராக திரு. செங்கோடன் என்பவர் இருந்து வந்தார் எனவும் அவருக்கு கையெழுத்து தவிர எழுதப் படிக்கத் தெரியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தியோ அல்லது கூட்டுச் சேர்ந்தோ மேல் சாதியைச் சேர்ந்த துணைத் தலைவர் திரு. பழனிசாமி மற்றும் நியமன பணிக்குழுத் தலைவர் திரு. நாச்சியண்ணன் ஆகியோர் பேரூராட்சி செலவினங்களை மாதம் ஒன்றுக்கு 10 லட்சத்திற்கு மேல் கணக்கெழுதி ஊழல் செய்து வருவதாக தெரிகிறதென குறிப்பிடப்பட்டுள்ளது. மாதச் செலவினங்கள் ரூ.14.00 லட்சம் முதல் ரூ.16 லட்சமாக எழுதப்பட்டு மன்றத்தில் மெஜாரிட்டி இருப்பதை காட்டி தீர்மானம் நிறைவேற்றி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்டோபர் 2014 செலவினத்தில் வழக்கு கட்டணம் ரூ.20,000/- என்று ஐந்து இடத்தில் போட்டுள்ளதாகவும் மக்களுக்கு எதுவும் செய்யாமல் பொய் கணக்கு காட்டி பல லட்சங்களை மோசடி செய்பவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இப்புகார் மனு மீது முறைமன்ற நடுவ அழைப்பாணை வாயிலாக 01.03.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி விசாரணைக்கு மனுதாரர்கள் ஆஜராகவில்லை. ஆனால், மனுதாரர்கள் இருவரும் 15.02.2017 நாளிட்ட தங்களது கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தங்களுடைய விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்கள்.

> *"...அக்டோபர் 2014 அஜண்டாவில் வரவு, செலவு கணக்கில் ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம்) வழக்கு கட்டணம் என ஐந்து இடங்களில் (ஒரே மாதத்தில்) எழுதி வரவு, செலவு கணக்கு மன்றத்தில் வைக்கப்பட்டதை அறிய முடிந்தது. இது குறித்து பேசிக் கொண்டிருக்கும் போது அங்கு வந்த ஊர்பொதுமக்களும் இது குறித்து புகார் அனுப்பும்படி கூறினார்கள். அதாவது மன்ற சேர்மேனாக இருப்பவர் செங்கோடன் தனது பெயர் எனும் ஐந்து எழுத்து மட்டுமே தெரிந்து கையெழுத்து போடக்கூடிய நபர். வேறு எழுதவோ, படிக்கவோ தெரியாதவர். இதனால் மன்றத்தில் உதவி சேர்மேனாக உள்ள பழனிச்சாமி அவர்களும், நியமனக்குழு உறுப்பினர் நாச்சியண்ணன் அவர்களும் படித்தவர்கள் என்பதால் அதிக அளவில் செலவினங்களை பதிவு செய்து மன்றத்தில் வைத்து முறைகேடு செய்து வருகிறார்கள் என்று மக்கள் கூறியதைக் கேட்ட பிறகு நாங்கள் மூன்று மாத செலவினங்களின் ஆதாரத்தின் நகல் எடுத்து புகார் விண்ணப்பம் அனுப்பினோம்.*

இதுவே பதிலாக எங்களுடைய இந்த விளக்கத்தை தாங்கள் எடுத்து கொள்ளுமாறு பணிவன்புடன் ஐயா அவர்களை கேட்டுக் கொள்கிறோம். தாங்கள் எந்த முடிவை எடுத்தாலும் எங்களுக்கு ஆட்சேபனையில்லை. எதிர்மனுதாரர்கள் பதவி முடிவு பெற்று சில மாதங்களும் ஆகி விட்டன..." எனத் தெரிவித்துள்ளனர்.

இப்புகார் மனு தொடர்பாக முறைமன்ற நடுவ அறிவிப்பாணை வாயிலாக விளக்க அறிக்கை சமர்ப்பித்திட செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. தேவூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 24.02.2017 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"...பேரூராட்சிகள் 1920ம் வருடத்தில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தினை அடிப்படையாக கொண்டு இயங்கி வருகின்றன. பேரூராட்சிகளில் பணியாளர்கள் ஊதியம், இயக்கச் செலவுகள், பழுது மற்றும் பராமரிப்புகள், நிர்வாக செலவினங்கள், நிதிச் செலவினங்கள் மற்றும் இதர தலைப்புகளின் கீழ் செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை அடிப்படையாக கொண்டே, இப்பேரூராட்சியில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாதந்தோறும், இப்பேரூராட்சியில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் இதரப்படிகள் பணியாளர்களுக்கான ஊதியம் என்ற தலைப்பில் வழங்கப்படுகின்றன...

பேரூராட்சியில் உள்ள தெருவிளக்குகள், குடிநீர் ஆதாரங்கள் அலுவலக கட்டிடம் ஆகியவற்றிற்கான மின்கட்டணங்கள், பராமரிப்புகள் இயக்கச் செலவுகள் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருந்து பெறப்படும் மின்கட்டண கேட்பின் அடிப்படையில் மேற்காணும் தொகை செலுத்தப்படுகிறது. மேலும் பராமரிப்புகளுக்காக பெறப்படும் புகார்கள் அடிப்படையில் பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டு உரிய செலவினம் மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வழங்கப்படும் குடிநீருக்கு அவ்வலுவலகத்தில் வழங்கப்படும் கேட்பின் அடிப்படையில் குடிநீர் கட்டணங்கள் செலுத்தப்படுகிறது. இது தவிர, அலுவலக தொலைபேசிக் கட்டணங்கள், அலுவலக நிர்வாகத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளுக்கு வழக்கு கட்டணங்கள் பணியாளர்களது ஊதியப் பிடித்தங்கள், பணியாளர்களது கடன் தொகைகள், விடுப்பு ஊதியங்கள், ஈமச்சடங்கு மான்யங்கள் மற்றும் பழுது பராமரிப்பு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்கு மன்ற அனுமதி பெறப்பட வேண்டும் என சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளதால், அதன்படி, மாதாமாதம் மன்றக் கூட்டம் நடத்தப்பட்டு, மன்றத்தில்

வரவு மற்றும் செலவுகள் வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களும் பொது மக்களது நன்மையினை கருதியே பொது மக்களுக்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுகளும், சட்ட விதிமுறைக்கு உட்பட்டு மன்ற அனுமதி பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தங்களது மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவையாகும். பேரூராட்சி நிர்வாகத்தால் குடிநீர், தெருவிளக்குகள், பொது சுகாதாரம் மற்றும் அலுவலக நிர்வாகம் ஆகிய அனைத்தும் பொது மக்களது நலன் கருதியே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வப்போது ஏற்படும் குடிநீர் பராமரிப்புகள் உடனுக்குடன் பராமரிப்பு செய்து குடிநீர் பொது மக்களுக்கு தொய்வின்றி, சீராக சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுபோலவே, தெருவிளக்குகள் மற்றும் பொது சுகாதாரம் ஆகிய இனங்களில் பொது மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படா வண்ணம் துப்புரவுப் பணிகளும், தெருவிளக்கு வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான செலவினங்கள் பேரூராட்சியின் பொது நிதியில் இருந்து வழங்கப்பட்டு, சட்ட விதிகளின்படி, மன்ற அனுமதி பெறப்பட்டு பொது மக்கள் நலன் காக்கப்பட்டுள்ளது... என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மனுதாரர்கள், பேரூராட்சியின் பொது மக்களுக்கு எதுவும் செய்யவில்லை என்பது முற்றிலும் ஆதாரமில்லாமல் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டாகும். மேலும் பேரூராட்சி துப்புரவுப் பணியாளர்கள், பேரூராட்சி நிர்வாகத்திற்கு எதிராக தங்களது பணி தொடர்பாக சென்னை உயர் நீதி மன்றத்தால் தொடரப்பட்ட வழக்கிற்காக, அரசு வழக்கறிஞரின் அறிவுரைப்படியே எதிர் மனு தாக்கல் செய்யப்பட்டு, அதற்கான வழக்கு கட்டணம் அவரது கேட்பின் பேரில் செலுத்தப்பட்டுள்ளது. இச்செலவினம் பேரூராட்சி நிர்வாக நலன் கருதியே மேற்கொள்ளப்பட்டுள்ளது. பேரூராட்சிக்கு எதிராக வழக்கு தொடரும் போது, எதிர் வழக்கு மேற்கொள்வது பேரூராட்சியின் கடமையாகும் என்பதால் எதிர் வழக்கு மேற்கொண்டு அதற்கான வழக்குக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. மேற்காணும் செலவுகள் அனைத்தும் மன்ற அனுமதிக்குட்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. மேற்காணும் அரசு வழக்குக் கட்டணம் என்பது இன்றியமையாததாகும் எனத் தெரிவித்துள்ளார்.

இப்பேரூராட்சியில், புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் அனைத்தும் சட்ட விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பொது மக்களது நலன் கருதியே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் மனுதாரர்கள் தவறான நோக்கத்துடனும், தங்களது சொந்த விருப்பு வெறுப்புகளின் காரணமாகவும், சுய நல

நோக்கத்தோடும் எதிர் மனுதாரர்களாகிய துணைத் தலைவர் திரு. பழனிசாமியின் மீதும் மற்றும் நியமனக்குழு உறுப்பினர் திரு. நாச்சியண்ணன் என்பவர் மீதும் புகார் தெரிவித்துள்ளனர். மேற்காணும் எதிர் மனுதாரர்கள் இருவரும் இப்பேரூராட்சியில் தங்களுக்குரிய பணிகளை பொது மக்களது நலன் கருதியே மேற்கொண்டுள்ளனர், என்றும் விளக்கங்களை ஏற்று மேற்காணும் குற்றச்சாட்டுகளை தள்ளுபடி செய்யுமாறும் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மனுதாரர் மனு மற்றும் தேவூர் செயல் அலுவலரின் விளக்க அறிக்கை பரிசீலிக்கப்பட்டது. புகார் மனுதாரரும் நேரில் ஆஜராகி குற்றச்சாட்டை உறுதி செய்யவில்லை. மேலும், போதிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டும் அஞ்சல் மூலமாகக் கூட தகுந்த ஆதாரங்கள், ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில் செயல் அலுவலரின் அறிக்கை ஏற்றுக்கொள்ளத் தக்கதாக உள்ளதாலும், முறையீட்டு மனுதாரரின் மனு போதிய ஆதாரமற்ற மனுவாக உள்ளதாலும் மனுவை தள்ளுபடி செய்திட இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1–ஆம் நாளன்று கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/
செயலாளர்.

6-9-17

6/9/17

**பெறுநர்**

1) திரு. M.S. ஆண்டவர்,
முன்னாள் மன்ற உறுப்பினர்.

2) திரு. T. பால சுப்ரமணியம்,
முன்னாள் மன்ற உறுப்பினர்,
தேவூர் பேரூராட்சி மற்றும்
ஊர் பொதுமக்கள், தேவூர்,
சேலம் மாவட்டம்.

3) செயல் அலுவலர்,
தேவூர் பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.

4) பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம், சென்னை - 600 108.